# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2024.03.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

***1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *இவ்வாசகம் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்னர் புதிய பிரிவு 4அ வினை உட்புகுத்துவதன்மூலம் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான அப்புதிய பிரிவின் சட்டப்பயனானது பிரிவு 4அ தொடங்கும் தேதியன்று தொடங்கி 2024, திசெம்பர் 15 ஆம் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியின்போது, எந்தக் கடன் தொடர்பில் தவணை தவறுகை புரியப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கடனுக்கு பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை விற்பனை செய்தலை இடைநிறுத்துவதற்கானதுமாகும்.*

**வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல்**
**(விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)**

*ச. வ.- ஓ. 17/2024*

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தில் 4அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

***2.*** ஆயிரத்துதொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*“ஏதேனும் ஆதனத்தை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதனை தற்காலிகமாக இடை நிறுத்துதல்*

*4அ.* மூன்றாம் பிரிவுக்கான காப்புவாசகம் மற்றும் 4 ஆம் பிரிவுக்கான ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபையானது இப்பிரிவு தொடங்கும் தேதியன்று தொடங்கி 2024, திசெம்பர் 15 ஆந்தேதியன்று முடிவுறுகின்ற காலப்பகுதியின் போது, எந்தக் கடன் தொடர்பில் தவணை தவறுகை புரியப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கடனுக்குப் பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு எவரேனும் ஆளுக்கு அதிகாரமளித்தலாகாது.”.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***3.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.